# ப்ராம்ப்ட்டன் நகரின் 2022 ஆம் ஆண்டு தெரு கூட்டும் நிகழ்ச்சித் திட்டம் துவங்குகிறது

ப்ராம்ப்ட்டன், ON (மே 11, 2022) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, 2022 ஆன் அண்டிற்கான தெருக்கள் தூய்மை செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தினை துவங்கி விட்டது. தெருக்கள் தூய்மை செய்யும் பணியானது தொழிலக பகுதிகள் மற்றும் சுற்று வட்ட தெருக்களில் முதலில் துவங்கும்; குடியிருப்பு பகுதிகளில் அடுத்த கட்டமாக நடைபெறும்.

தெருக்கள் மற்றும் கழிவுநீர்க் கால்வாய்களை தூய்மையாக வைப்பதற்காக, வஸந்த பருவத்தில் மண் மற்றும் குப்பைகள் நகர சாலைகளில் இருந்து நீக்கப்படுகிறது. இது வெள்ள நீர் வடியும் கால்வாய்களில் அடைப்பு ஏற்படுவதை தடுத்து வாகன ஓட்டுநர்களுக்கும் பாதசாரிகளுக்கும் பாதுகாப்பான சாலைகள் அமைய வழி வகுக்கிறது. வஸந்த கால தெருக்கூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தில் அடங்குபவை:

- பாலங்கள், நீர்பிடிப்பு பகுதிகள் மற்றும் சாக்கடைகள் உள்ளிட்ட நகரத்திற்குச் சொந்தமான அனைத்து சாலைகளின் மேற்பரப்புக்கு தார் பூசுதல்
- கடின-மேற்பரப்பு கொண்ட மரங்களடர்ந்த சாலைகள் மற்றும் இடைநிலை தடுப்புகள்
- குளிர்காலத்தில் நகரத்தால் உழப்பட்ட பக்கவாட்டுபாதைகள் மற்றும் நடைபாதைகள்
- ப்ராம்ப்ட்டன் நகர பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் பிற நகர வசதி கட்டிடங்களில் உள்ள வாகன நிறுத்துமிடங்கள்
- தடுப்பு பதிப்புகள் இல்லாத புறச் சாலைகள் தேவைக்கேற்ப கழுவி சுத்தப்படுத்தப்படுகின்றன மற்றும்/அல்லது கூட்டப்படுகின்றன
- பக்கவாட்டுப்பாதை கூட்டுதல்
- உப்பு பெட்டிகள் மற்றும் பனி வேலிகளை அகற்றுதல்
- மரங்களடர்ந்த சாலைகளில் பவர் வாஷிங்
- புல்வெளி பழுதுபார்த்தல்
- நகரின் பூங்கா பராமரிப்புத் துறையுடன் இணைந்து குப்பைகளை எடுத்தல்

வஸந்த கால தூய்மைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தில் நகரவாசிகளுக்கு நினைவூட்டப்படும் விஷயங்ககள்:

- திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை குடியிருப்புப் பகுதி தெருக்களில் வாகனங்களை நிறுத்த வேண்டாம்
- டிரைவ்வேக்களில் நிறுத்தப்படும் வாகனங்கள் தெருவில் நீட்டிக்கொண்டிருக்காமல் இருப்பதை உறுதி செய்யவும்

- குப்பை சேகரிக்கும் நாட்களில் குப்பைக் கொள்கலன்கள் மற்றும் மறுசுழற்சி பெட்டிகளை சாலையில் இருந்து தூரமாக தள்ளி வைக்கவும்
- கூடைப்பந்து மற்றும் ஹாக்கி வலைகளை சாலையிலிருந்து விலக்கி, தடுப்பு பதிப்பு கற்களிலிருந்து வெகு தொலைவில் வைக்கவும்
- புரிதலுடன் இருந்து பொறுமை காக்கவும். தெரு துடைப்பு நடந்து கொண்டிருக்கும் போது, சிறிது இரைச்சல் மற்றும் தூசி இருக்கலாம்
- குளிர் மற்றும் மழை கால சூழ்நிலை தெரு துப்புரவு பணியாளர்கள் இயங்குவதை தடுக்கலாம் என்பதால் பொறுமையாக இருங்கள். நிகழ்ச்சித்திட்டம் செயல்படுவதற்கு, வெப்பநிலை தொடர்ந்து சீராக பூஜ்ஜியத்திற்கு மேல் இருக்க வேண்டும்

வஸந்த கால துடைப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அது நடைபெறும் பகுதிகளுக்கான நிலவரைபடத்திற்கு வருகை தரவும்: Brampton.ca.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca